செய்தி வெளியீடு எண்: 26 நாள்: 15.06.2019.

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி மின் தடை பழுது நீகக்கும் மையத்தினை திறந்து வைத்தார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் ரூ.25.52 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி மின் தடை பழுது நீக்கும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (15.06.2019) இன்று திறந்து வைத்தார்.

தமிழக அரசின் உத்தரவின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உள்ள 16 மின்பகிர்மான வட்டங்களில் ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி மின் தடை பழுது நீக்கம் மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், மதுரை மண்டலத்திற்குட்பட்ட தேனி மின்பகிர்மான வட்டத்திற்கு என பிரத்யேகமாக கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி தடை பழுது நீக்கும் மையம் தேனி மின்பகிர்மான வட்ட மத்திய அலுவலக வளாகத்தில் ரூ.25.52 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தின் மூலம் தேனி மின்பகிர்மான வட்டத்தில் உள்ள தேனி, பெரியகுளம், தேவதானப்பட்டி, ஆண்டிபட்டி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம், போடிநாயக்கனூர், இராசிங்காபுரம், தேவாரம், கோம்பை, கூடலூர், சுருளிப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 4,89,585 மின் இணைப்பு பயனீட்டாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி நேரிடையாக தங்கள் மின்இணைப்பில் ஏற்படும் பழுதுகளை தெரிவித்து, அவற்றை விரைவாக சரிசெய்து கொள்ளலாம். இந்த மையம் 24x7 என்ற கால அளவில் செயல்படும்.

தற்போது அனைத்து மின்வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சியுஜி சிம் கார்டு மின் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. மின் தடை சம்பந்தமான புகார்கள் பழுது நீக்கும் மையத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் பழுது நீக்கும் களப்பணியாளர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டு, நுகர்வோருக்கு காலதாமதம் ஏற்படாத வண்ணம் மின தடை நிவர்த்தி செய்யப்படும். எனவே, மின்தடை பற்றிய புகார்களை 24 மணி நேரமும் பதிவு செய்திட கட்டணமில்லா தொலைபேசி எண்களான 1912, 04546-1912 மற்றும் 04546-250031 ஆகிய எண்களை பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்கள் மின்இணைப்பு தொடர்பான புகார்களை உடனுக்குடன் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு www.tangedco.gov.in என்ற இணைய தளத்தினை தொடர்பு கொள்ளலாம்.

இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன், திரு.ஆ.மகாராஜன், திரு.கே.எஸ்.சரவணக்குமார், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மதுரை மண்டல தலைமை பொறியாளர் ஜெ.கோல்டுவின் வில்லியம்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, தேனி மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் கே.உமாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, செயற்பொறியாளர்கள் எ.சகாயராஜ், சி.லட்சுமி, சி.மாறன்மணி, பி.பாலாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**